ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2214/67 - 2021 පෙබරවාරි මස 12 වැනි සිකුරාදා - 2021.02.12

*2214/67 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, ஹல்தும்முல்ல நகர நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், வீரகோன்கம நீர் சுத்திகரிப்பு பிரிவை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*தொடர்பு இல.: 5/3/BD/03.*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*'லக்திய மெதுர',*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, பெப்புருவரி 10.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தின் ஹல்தும்முல்ல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 158G, வீரகோன்கம கிராம அலுவலர் பிரிவில் வீரகோன்கம கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள திட்டப்படத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வீரகோன்கஹபதன என்றழைக்கப்படுகின்ற காணியின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 0.2023 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளினுள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : ஆர். டபிள்யூ. டி. டீ. ராஜசேகர அவர்கள் வைத்திருக்கின்ற காணி ;
கிழக்கு : கழுபஹன ஒஹிய வீதி ;
தெற்கு : ஆர். டபிள்யூ. டி. டீ. ராஜசேகர அவர்கள் வைத்திருக்கின்ற காணி ;
மேற்கு : ஆர். டபிள்யூ. டி. டீ. ராஜசேகர அவர்கள் வைத்திருக்கின்ற காணி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : ஆர். டபிள்யூ. டி. டீ. ராஜசேகர,
இலக்கம் 478, நுன்கொமுகொட,
களனி.

02-646

---

## 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, ஜா-எல, ஏகல கழிவு நீர் அகற்றும் செயற்திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் கீழ் குடஹகபொல தெற்கு இலக்கம் 7 நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல.: 5/3/GQ/11.
நீர் வழங்கல் அமைச்சு,
'லக்திய மெதுர',
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, பெப்புருவரி 10.

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தின், ஜா-எல பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 195, குடஹகபொல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் குடஹகபொல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள திட்டப்படத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 20 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : சிலோன் பிரஸ் சீபூட் தனியார் நிறுவனம் ;
கிழக்கு : கிரிஸ்ட் கின்ஹ்ஸ் வீதி ;
தெற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
மேற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை.

02-647

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.